**கம்பஹா மாநகர சபை - 2020**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பஹா மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.1 (ஆ), (ஈ), (உ), (எ), (ஏ), (ஒ), (ஔ), (க), (கி), (கு), (கெ), (கை), (கே), (கொ), (ப), (சீ)

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 6.3 | காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி / கட்டிடங்கள் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய LGD/09/2019(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் குறியீட்டு இலக்கம் 2100 இன் கீழ் சொத்துக்களின் வகைகள் 14 ஆக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சபையின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் 09 விடயங்களின் கீழ் மாத்திரமே வகைப்படுத்தப்பட்டிருந்தன. | 14 விடயங்கள், 09 விடயங்களாக மாத்திரம் வகைப்படுத்தப் பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கின்றோம். 2021 ஆம் ஆண்டின் போது தீயணைப்பு பாதுகாப்பு உடைத் தொகுதிகள், பொருத்திகள், கணனி மென்பொருள் மற்றும் இயந்திரம், பொறிகள் என்பவற்றை வகைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நடைமுறையல்லா செலவினங்களுக்கான அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 66,965,713 தொகை மூலதன மானிய கணக்கில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டமை காரணமாக அப்பெறுமதியினால் வருமானம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | செலவினங்களுக்காக அரசாங்கத்தில் இருந்து வருகின்ற பங்களிப்பிற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு 2020 ஆம் ஆண்டில் ஒதுக்கப்படாதிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். புதிய கணக்குகள் முறைமையின் பிரகாரம் பெறுமானத்தேய்வு சீராக்கம் மேற்கொள்ளாமைக்கான சலுகை 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த மையினால் அவ்வாறு செய்யப்படாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | பெறுமானத்தேய்வு பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | நாட்குறிப்பு இலக்கம் 46, 49, 57, 64 மற்றும் 67 இன் பிரகாரம் திரண்ட நிதிக் கணக்கில் ரூபா 73,664,850 செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதிக் கணக்கில் அப்பெறுமதி சீராக்கப்படாமையின் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 33,425,546 ஆக இருக்க | இது தொடர்பாக மேலும் கண்டறிந்து பதில் வழங்கப்படும். | நாட்குறிப்பு பதிவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய மிகை ரூபா 40,239,304 பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | பேரேட்டுப் பெறுமதியை பதிவழித்து முற்பணக் கணக்கு திறக்கப்படாதிருந்ததுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பெறுமதியை பதிவழித்தல் ஏனைய செலவினக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. பதிவழித்தல் பெறுமதி ரூபா 23,710,952 ஏனைய செலவினக் கணக்கில் பணமாக செலவிடப்பட்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் பெறுமதிகளை பதிவழித்து முற்பணக் கணக்கு திறந்து பேணிச் செல்லப்படும். | பெறுமதி பதிவழித்தல் கணக்கொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறிகள் மற்றும் இயந்திரக் கணக்கு மீதி ரூபா 29,645,329 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு அலுவலக உபகரணக் கணக்கின் மீதியான ரூபா 4,680,665 தொகை பொறிகள் மற்றும் இயந்திரக் கணக்கில் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது கணனிமயப்படுத்தலின் போது ஏற்பட்ட வழுவாகும். | கணக்கு மீதிகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் பாத்திரங்கள் மற்றும் உபகரண கணக்கின் ஆரம்ப மீதியொன்று காணப்படாதிருந்த போதிலும், பொறிகள் மற்றும் இயந்திரக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 29,645,329 தொகை பாத்திரங்கள் மற்றும் உபகரணக் கணக்கில் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது கணனிமயப்படுத்தலின் போது ஏற்பட்ட வழுவாகும். | கணக்கு மீதிகளை சரியாக கணக்குகளுக்கு எடுத்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ஆதன வரிக் கணக்கில் இறுதி திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 59,310,442 தொகை இறுதிக் கணக்கில் ரூபா 60,019,840 ஆக | யக்கல உப அலுவலகத்தில் 2020.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ஆதன வரி மீதி நாட்குறிப்பு பிரதி செய்யும் போது ரூபா 709,398 | பேரேட்டுக் கணக்கின் மீதியை சரியாக இறுதிக் கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டமையினால் இறுதிக் கணக்கு ரூபா 709,398 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தொகை அதிகரித்து குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வழுக்கள் 2021 இன் ஆரம்ப மீதி சரி செய்வதன் கீழ் சரிசெய்யப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைக்க வேண்டியது என்ற குறிப்பில் கூட்டுமொத்தமாக ரூபா 117,383,709 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ரூபா 117,317,361 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 66,348 இனால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இறுதி நிதிக்கூற்றில் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைக்க வேண்டியவைகளுக்குரிய 16 ஆவது குறிப்பில் பெற வேண்டிய வாடகை வீட்டு பெறுமதியான ரூபா 66,348.75 தொகை கணனி வழுவின் அடிப்படையில் கூட்டல்களில் உள்ளடக்கப்படாமையின் அடிப்படையில் இந்தப் பிரச்சினை எழுந்திருந்தது. | குறைவாக கணக்கீடு செய்யப்பட்ட வைகள் சரிசெய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 132,650,873 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 216,488,567 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 24 ஆந் திகதி 2155/6 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தில் 1 ஆம் அத்தியாயத்தில் 25 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் நகராதிபதிக்கு, உப நகராதிபதிக்கு அல்லது வேறொருவருக்கு அல்லது உறுப்பினருக்கோ அல்லது நகர ஆணையாளர் அல்லது வேறொருவரோ அல்லது உத்தியோகத்தருக்கோ அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவருக்கு ஊழியராக கருதி கையளிக்கப்படுகின்ற ஏதாவது பரிசுகள், நன்கொடைகள் மாநகர சபைக்கு மேற்கொள்ளப்பட்ட | நகராதிபதியின் சமூகப் பணிகள் தொடர்பில் உள்ள நன்மதிப்பு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் சபையின் நிதியத்திற்கு வழங்கப்படாத பணம் பெறப்படுகின்ற முறைமையாக நகராதிபதி நிதியத்தை அறிமுகப்படுத்த முடியும். நகராதிபதி நிதியத்தின் சகல செலவினங்களும் காசோலையின் மூலம் மாத்திரம் செய்யப்பட்டிருந்ததை | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மானியமாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறான நன்கொடைகள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் நிதியத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். எனினும் அரச வங்கியொன்றில் நகராதிபதி நிதியத்தின் பெயரில் வங்கிக் கணக்கொன்று, நகராதிபதிக்கு கிடைக்கின்ற நன்கொடைகளில் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் யூலை மாதம் முதல் திசெம்பர் வரையான 06 மாத காலத்தில் 09 சந்தர்ப்பங்களின் போது கூட்டுப்பெறுமதி ரூபா 1,028,743 தொகை கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 29 சந்தர்ப்பங்களின் போது கூட்டுப் பெறுமதி ரூபா 1,016,425 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய அடியிதழ்கள், பற்றுச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய எந்தவொரு ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அறியத்தருகின்றோம். மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் இலக்கத்தின் கீழ் கிடைக்கின்ற சகல வருமானங்களும், 188 ஆம் இலக்கத்தின் கீழ் சகல செலவினங்களும், சபை நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இதற்குரிய அடியிதழ்கள், பற்றுச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு நகராதிபதி அலுவலகம் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் மூடப்பட்டிருந்தமையினால் முடியாதிருந்தது. | |

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62,346,436 தொகையான வீதவரியும் வரிப் பெறுமதி அறவிடுவதற்கு இருந்ததுடன் அதில் நிலுவையாக இருந்த மீதி ஒரு வருட காலம் முதல் ரூபா 7,701,937 தொகை, 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் ரூபா 7,771,270 இனையும், 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையே | 2020 ஆம் ஆண்டின் போது கொவிட் தொற்று நோய் நிலைமையின் இடையே துறைசார்ந்த வருமானங்களை சேகரிப்பதற்கு பிரச்சினைகள் காணப்பட்டது. அவ்வாறே வரி செலுத்தாதிருந்த வர்களுக்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக வரிச் சலுகைகள் வழங்குவதற்கு ஏற்பட்டிருந்தது. இந்த நிலுவை காலப்பகுப்பாய்வில் சுட்டிக் | நிலுவை ஆதன வரி மற்றும் வரியை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 20,206,589 இனையும், 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையில் ரூபா 26,666,641 இனையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காட்டப்பட்டதன் பிரகாரம் நிலுவையில் நீண்ட காலமாக உள்ள நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்காக முன்னுரிமை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அறவிடுவதற்கு முடியாத நிலுவை வருமானங்கள் தொடர்பான காரணங்களை வெளிப்படுத்தி அந்த வருமானங்களை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | பெறவேண்டிய ஆதன வரி மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 60,019,840 ஆக இருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 59,310,442 ஆனமையினால் ரூபா 709,398 வேறுபாடொன்றும் அவதானிக்கப்பட்டது. | ரூபா 709,398 வேறுபாடொன்று வெளிப்படுத்தப்படுவது யாதெனில் 2020.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ஆதன வரி மீதி நாட்குறிப்பினை பிரதி செய்யும் போது ஏற்பட்ட வழுவாக இருந்தமையினால் மேற்கூறப்பட்ட வழுக்கள் 2021 இன் ஆரம்ப மீதி சரிசெய்வதன் கீழ் சரிசெய்வதற்கு கண்காணிக்கப்படும். அதன் பிரகாரம் 2021.12.31 இல் கிடைக்க வேண்டிய கணக்கின் சரியான மீதி பெறுமதி ரூபா 59,310,442 ஆக இருந்தமையை இதன் மூலம் சுட்டிக் காட்டுகின்றோம். | பட்டோலைகளின் மீதியையும் நிதிக்கூற்றுக்களின் மீதியையும் இணக்கம் செய்தல் வேண்டும். |

### 2.3.2 களியாட்ட வரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 சினிமா மண்டபங்களிலிருந்து ரூபா 5,067,942 பெறுமதியான நிலுவை களியாட்ட வரி வருமானமொன்றை அறவிடுவதற்கு இருந்ததுடன் அதில் | சினிமா மண்டபங்கள் திறகக்பட்டவுடன் நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பப்ளிக் சினிமா | நிலுவை வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 4,793,162 ஆன நிலுவை வருமானமொன்று பப்ளிக் சினிமா மண்டபத்திலிருந்து அறவிட வேண்டியிருந்தது. | மண்டபத்தின் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நிறுவனம் நடவடிக்கை எடுக்காமையால் வழக்கு நடவடிக்கைகளை நாளதுவரையாக்கு வதற்காக மாநகர சட்ட உத்தியோகத்தருக்கு கோவை அனுப்பப்பட்டுள்ளது. | |

**2.3.3 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை பெறுமதி ரூபா 36,218,243 ஆக இருந்ததுடன், 01 வருடத்திற்கு குறைந்த, 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடையே, 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் மற்றும் 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையே முறையே ரூபா 13,352,139 தொகை, ரூபா 7,323,722 தொகை, ரூபா 3,686,205 தொகை, ரூபா 11,856,177 ஆக அறவிடுவதற்கு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் போது கொவிட் தொற்று நோய்க்கிடையே துறைசார்ந்த வருமானங்களை சேகரித்தல் செயழிலந்து காணப்பட்டது. அவ்வாறே வாடகைகளை புறக்கணித்தவர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக சலுகை வழங்க வேண்டியேற்பட்டது. அதனால் இந்த நிலைமையின் கீழும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கணிசமான காலம் செலுத்தாதிருந்த வாடகையை அறவிடுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் இந்த விடயம் மூலம் ரூபா 11 மில்லியனுக்கு மேற்பட்ட வருமானம் ஒரே தடவை சபைக்கு அறவிட முடியுமாக இருந்தது. | நிலுவைக் கடை வாடகைப் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3.4 ஏனைய வருமானங்கள்

**வாகன தரித்துவைத்தல் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 05 வாகன நிறுத்தி வைத்தல் இடங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,641,456 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி கட்டணங்களை செலுத்துவதை புறக்கணித்தமையின் அடிப்படையில் இந்த மீதி எழுந்திருந்தது. கேள்வி தாரர்களிடமிருந்து உரிய ஆண்டின் போது அந்த பிரதேசத்தில் சபை ஊழியர்களை ஈடுபடுத்தி கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக தற்போது இந்த நிலுவை கோவைகள் மாநகர சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயலாற்றல்

**கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு தனியார் காணியொன்றில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக காணி உரிமையாளருக்கு ரூபா 29,127,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 செப்தெம்பர் 07 ஆந் திகதி கழிவுப் பொருள் அகற்றுகின்ற இடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் | 2019 ஆம் ஆண்டு கம்பஹா மாநகர சபையின் கழிவுப் பொருட்கள் கெரவலப்பிட்டிய கழிவுப் பொருள் தளத்திற்கு அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் கௌரவ ஆளுனரின் | கழிவுப் பொருள் அகற்றும் பணிகளுக்காக முறையான கேள்வி நடைமுறையை பின்பற்றி கழிவுப் பொருட்களை அகற்றுபவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்த |

| | | |
| --- | --- | --- |
| சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி மற்றும் சுகாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் கழிவுப்பொருள் மலை குவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கழிவுப் பொருள் அகற்றப்படுகின்ற இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெறப்படாதிருந்த போதிலும், கழிவுப்பொருள் போடப்படுகின்ற இடத்தில் சுகாதார ரீதியாக மேற்பார்வையொன்று மற்றும் அது தொடர்பான அறிக்கையொன்றும் கம்பஹா நீதிமன்றத்தினால் சபையின் சுகாதார பரிசோதகருக்கு வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | ஆலோசனையின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் 2019.08.02 ஆந் திகதிய LGD/03/02/4/27 ஆம் இலக்க கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் சபை தீர்மானமொன்று எடுத்து தனியார் காணியொன்றில் கழிவுப் பொருட்களை அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த இடத்தில் கூட்டுப்பசளை இயந்திரமொன்று பொருத்தப்பட்டுள்ளது. அதனை செயற்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உரிய அனுமதிப்ப பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமையால் அதற்காக 03 மாதங்களுக்குள் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறும், அதன் பிரதியொன்றை எங்களுக்கு சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. | துடன் முறையான கொடுப்பனவுகள் மற்றும் கழிவுப் பொருள் அகற்றும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். கழிவுப் பொருள் அகற்றுகின்ற இடத்திற்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கும் நீதிமன்றம் வழங்கிய கட்டளைகளை அமுல்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 ஆட்சேர்ப்பு தொடர்பான பரீட்சிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 29/2019 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 37 வேலை/கள தொழிலாளர்களும், 22 சுகாதார தொழிலாளர்களும், சேர்க்கப்பட்டிருந்தனர். உரிய நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிட்டு பதவியணியினரை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலைக்கள தொழிலாளர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 38 ஆகும். கொவிட் தொற்று நோய் நிலைமையின் இடையே நாளாந்த கொரோனா மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களின் கழிவுப் பொருட்களை அகற்றுதல், குழிகளில் இடல், நகர சபை எல்லையில் நாளாந்த கொரோன | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட்ட போதும், பதவியணியினர் நாயதுவரையாக்கப்படாமையின் காரணமாக அத்திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வெற்றிடங்களின் அளவினை விஞ்சி சேர்க்கப்பட்ட 28 பேர்களுக்காக 2020 ஆம் ஆண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 11,608,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிலைமைக்கு உட்படுகின்ற அளவு அதிகரித்துச் சென்றமையுடன் தொற்று நோய்க் கிருமிகளை நீக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நாளாந்த PCR பரிசோதனை, Antigen பரிசோதனை மேற்கொள்ளல், தடுப்பூசிகளை இடல், கொவிட் படையணியை அமுல்படுத்துதல் போன்ற அத்தியவசிய கடமைகளின் அளவிற்காக கணிசமான அளவில் பதவியணியினரின் தேவை ஏற்பட்டிருந்தது. | |

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக ஊடரங்குச் சட்ட காலத்தில் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கம்பஹா பிரதேச செயலகத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களின் எண்ணிக்கைக்காக தேவையான தேயிலை பக்கற்றுக்களின் அளவு தனியார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டிருந்த போதும், மாநகர சபை 6000 தேயிலை பக்கற்றுக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 540,000 தொகையும், பகிர்ந்தளிக்கப்பட்ட உலர் உணவு பொதியில் அடங்காத இரண்டாவது 1000 பக்கற்றுக்கள் மற்றும் 1000 பிஸ்கட் பக்கற்றுக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 215,000 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சபையினால் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக பகிர்ந்தளிப்பதற்காக 5,774 கிலோகிராம் மரக்கறிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், சபை உறுப்பினர்களுக்கு 4,014 கிலோகிராம் அளவில் விநியோகிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டங்களை பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களிட மிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |